2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

70. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கான (முன்னாள் உறுப்பினர்களுக்கான மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பொதுத் (பணியாளரமைப்பு I&சட்டமன்றம்) துறையின் 6-3-2024 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 195-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

71. 2022-2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உயிரிப் பல்வகைமை வாரியத்தின் ஆண்டறிக்கை. [2002 ஆம் ஆண்டு உயிரியல் பல்வகைமை சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2003) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

72. 2022-2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

73. 2022-2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் ஐம்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

102. மானியக் கோரிக்கை எண் 40—நீர்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2024—2025. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

103. நீர்வளத் துறை பற்றிய திட்ட சாதனை, 2023-2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

104. நீர்வளத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)